செ.வெ.எண் . 390 நாள் 14.05.2010

# செய்தி வெளியீடு–14.5.2010

## தமிழக பள்ளிக் கல்வித் துறையில் சமச்சீர்க் கல்வித் திட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்டுள்ள முதல் வகுப்பு மற்றும் 6 ஆம் வகுப்புகளுக்கான புதிய பாட நூல்கள்!

## முதலமைச்சர் கலைஞர் வெளியிட்டார்!

தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறையில் சமச்சீர்க் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்திட தமிழக அரசு ஏற்கனவே முடிவு செய்து அறிவித்திருந்தது. அதன்படி, சமச்சீர்க் கல்வித் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுள்ள முதல் வகுப்பு மற்றும் 6 ஆம் வகுப்புகளுக்கான புதிய பாடநூல்கள் 2010–2011 ஆம் கல்வி ஆண்டில் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

இதற்காகப் பள்ளிக் கல்வித் துறை தயாரித்துள்ள புதிய பாடநூல்களைத் தமிழ்நாடு பாடநூல் கழகம் அச்சிட்டுள்ளது. அச்சிடப்பட்டுள்ள முதலாம் வகுப்பிற்குரிய தமிழ் வழியிலான "தமிழ்," "ஆங்கிலம்," "கணக்கு," "சூழ்நிலையியல்" பாடநூல்கள், ஆங்கிலம் வழியிலான "Mathematics," "Environmental Studies"பாடநூல்கள்;

ஆறாம் வகுப்பிற்குரிய தமிழ் வழியிலான, "தமிழ்," "ஆங்கிலம்," "கணக்கு," "அறிவியல்," "சமூக அறிவியல்" பாடநூல்கள், ஆங்கிலம் வழியிலான "Mathematics," "Science," "Social Science"பாடநூல்கள் ஆகியவற்றை முதலமைச்சர் கலைஞர் இன்று (14.5.2010) வெளியிட்டார்.

தமிழகத்தில் வாழும் சிறுபான்மைச் சமுதாய மக்கள் பயன்பெறும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள, "தெலுங்கு," "உருது," "மலையாளம்," "கன்னடம்," "சமஸ்கிருதம்," "அரபிக்" ஆகிய சிறுபான்மை மொழிகளுக்குரிய பாடநூல்கள் அடுத்த சில நாள்களில் வெளியிடப்படவுள்ளன.

இந்நிகழ்வின்போது, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, அரசு முதன்மைச் செயலாளர் திரு. ம. குற்றாலிங்கம், இ.ஆ.ப., தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. சத்யகோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு பாடநூல் கழகச் செயலாளர் திருமதி எம். லட்சுமி ஆகியோர் உடனிருந்தனர்.

*****

வெளியீடு: இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.